# பத்திரிக்கை செய்தி

## புதிய மின் இணைப்பு வழங்க லஞ்சம் கேட்டு பெற்ற வழக்கில் முன்னாள் மின்வாரிய போர்மேன் அவர்களுக்கு தண்டனை விதித்து தீர்ப்பு

கடந்த 2011ம் வருடம், புகார்தாரர் திரு.ரகுநாதன் என்பவர் ஈரோடு மாவட்டத்தில் வசித்து வந்தார். புகார்தாரர் தன்னுடைய வீட்டிற்கு புதிய மின்இணைப்பு வேண்டி ஈரோடு மாவட்டம், தாமரைப்பாளையம், மின்வாரிய அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். திரு.விஸ்வநாதன், முன்னாள் போர்மேன், தாமரைப்பாளையம் மின்வாரிய அலுவலகம், ஈரோடு மாவட்டம் அவர்கள் புதிய மின்இணைப்பு வழங்குவதற்கு தனக்கு ரூ.1,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டுமென கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, ஈரோடு பிரிவில் வழக்குபதிவு செய்யப்பட்டது. 15.02.2011 தேதியன்று பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது, அதில் எதிரி, புகார்தாரரிடம் லஞ்சப்பணம் ரூ.1,000/-யை கேட்டு பெற்றுக்கொண்ட போது கைது செய்யப்பட்டார். இந்த வழக்கில் விசாரணை முடிவுற்று எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு ஈரோடு சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடத்தப்பட்டு இன்று 12.06.2023 எதிரி திரு.விஸ்வநாதன், முன்னாள் போர்மேனுக்கு சட்டப்பிரிவு 7of PC Act-ன் 1988 கீழ் 3 வருட கடுங்காவல் தண்டனையுடன் ரூ.5,000/- அபராதமும், சட்டப்பிரிவு 13(2) & 13(1) (d) of PC Act-ன் கீழ் 3 வருட கடுங்காவல் தண்டனையுடன் ரூ.5,000/- அபராதமும் விதித்து தண்டணையை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கினார்.

# PRESS NOTE

## FORMER TNEB FOREMAN CONVICTED IN BRIBE CASE

In 2011, the complainant Tr.Ragunathan of Erode District had applied for new EB connection for his house at TNEB, Thamaraipalayam Office, Erode district. Tr.Viswanathan, Former Foreman, TNEB Thamaraipalayam, Erode district, had demanded Rs.1,000/- as bribe for issuing new EB connection. The complainant not willing to give bribe, preferred complaint with Vigilance and Anti– Corruption, Erode Detachment. In this connection a trap was organized. On 15.02.2011 trap was laid against the accused and the accused was caught red-handed while demand and acceptance of bribe money Rs.1,000/- from the complainant. On completion of investigation, the case was charge sheeted against the accused. The case was tried before the Spl. Court for PC Act, Cases, Erode. Today 12.06.2023 Special Court pronounced the judgment against Tr.Viswanathan, former Foreman as convicted for 3 years Rigorous Imprisonment and with fine Rs.5,000/- u/s 7 and concurrently 3 years Rigorous Imprisonment and with fine Rs.5,000/- u/s.13(2) & 13(1)(d) of the Act. Both the sentences were ordered to run concurrently.